# தில்லியில் மரணமான ஆப்பிரிக்க மாணவர் திரு மசுன்டா கிடாடா ஆலிவர் தொடர்பான அறிக்கை

**மே 25, 2016**

நாம் ஆப்பிரிக்க மிஷன் தலைமை மூலம் வெலியிடப்பட்டுள்ள அறிக்கையை பார்த்துள்ளோம். தில்லியில் திரு மசுன்டா கிடாடா ஆலிவர், முதுகலை பட்டதாரி ஆப்பிரிக்க மாணவரின் மரணம் உண்மையில் மிகவும் துரதிருஷ்டமானது மற்றும் சந்தேகத்திற்கு இடமின்றி இதை நாங்கள் கண்டிக்கிறோம்.

ஆப்ரிக்கா உறவுகளை கையாளும் செயலாளர் (பொருளாதார உறவுகள்) ஸ்ரீ அமர் சின்ஹா, ஆப்பிரிக்க தூதரக டீன் மற்றும் எரித்திரியா தூதுவர் , ஆப்பிரிக்க மிஷன் தலைமை ஆகியோரை நேற்று சந்தித்தார். அவர், தகவல்களை பெற்ற உடனடியாக வெளியுறவு அமைச்சு இது பற்றி தில்லி போலீஸிற்கு தொடர்பு செய்ய, அவர்கள் இது தொடர்பாக விரைந்து செயல்பட்டதை அவர்களுக்கு விளக்கினார். ஒருவன் ஓட்டத்தில் இருக்கும் போது இரு சந்தேகத்திற்குறிய நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். நீதி நிலைக்கப்படும் மற்றும் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று நாம் உறுதி செய்துள்ளோம்.

மேலும் இனவெறி உந்துதல் என அனைத்து குற்றவியல் நடவடிக்கைகளையும் காண முடியாது என்று செயலாளர் (இஆர்) சுட்டிக்காட்டினார். ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்க மாணவர்கள் எந்த பிரச்சினைகளும் இல்லாமல் இந்தியாவில் தங்கள் கல்வியை தொடர்ந்து வருகின்றனர். இந்திய அரசு வெளிநாட்டு மாணவர்களுடன் தனது உறவுகளை ஆழமாக மதிக்கிறது, குறிப்பாக ஒரு வரலாற்று நெருக்கமான உறவு வைத்திருக்கும் ஆபிரிக்காவில்

இருந்து வரும் மாணவர்களுடன். நாங்கள் இது போன்ற துரதிருஷ்டவசமான சம்பவங்கள் திரும்ப நடக்காமல் இருக்கவும் ஆப்பிரிக்க மாணவர்கள் இந்தியாவை ஒரு வரவேற்பு வீடாக கண்டுகொண்டு தொடர உறுதி செய்வோம்.

வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீமதி. சுஷ்மா சுவராஜ் தனிப்பட்ட முறையில் இந்த விஷயத்தை கண்காணிக்கிறார். அவர், ஆப்பிரிக்க நாடுகளில் தூதரகங்க தலைவர்களை சந்தித்து மற்றும் ஆப்பிரிக்க பிரஜைகளின் பாதுகாப்பு குறித்து இந்திய அரசாங்கத்தின் ஆதரவு குறித்து உறுதியளிக்குமாறு வெளிவிவகார மாநில அமைச்சர் ஜெனரல் வி.கே. சிங் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளார். ஜெனரல் வி.கே. சிங் அவர்களின் பாதுகாப்பை உறுதியளிக்க மெட்ரோ நகரங்களில் ஆப்பிரிக்க மாணவர்களை சந்திக்க உள்ளார். இதுபோன்ற சந்திபுகளில் போலீஸ் கமிஷனர் பதிலாயனுப்பு செய்ய மாநில அரசுகளைளை நாம் வேண்டிக்கொள்வோம்.

**புது தில்லி**

**மே 25, 2016**